# இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு ரூ.7 லட்சம் கோடி

## வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்



**ஜோஹன்னஸ்பர்க், ஜூன் 4:** கடந்த ஆண்டு உலகிலேயே மிக அதிகமாக 86 பில்லியன் டாலர்கள் (சுமார் ரூ.7 லட்சம் கோடி) அந்நிய நேரடி முதலீட்டை இந்தியா ஈர்த்தது என்று மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தென் ஆப்பிரிக்கா தலைநகர் கேப் டௌனில் பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் அடங்கிய பிரிக்ஸ் கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், அங்கு இந்திய வம்சாவளியினர் சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

தற்போதைய இந்தியா மெதுவாக முன்னேறும் நாடு அல்ல. டிஜிட்டல் தொழில்நுட்பத்தில், ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவுக்கு சென்றாலும் நான் பார்க்காத நடைமுறைகள், செயல்திறன்களை இந்தியாவில் காண்கிறேன்.

கடந்த 9 ஆண்டுகளில் இந்தியாவில் நிகழ்ந்துள்ள மாற்றத்தின் வேகம் மிகப் பெரியது, மிகுந்த சக்திவாய்ந்தது என்பதை வெளிநாடுகளில் உள்ள இந்திய வம்சாவளியினர், இந்தியாவின் நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர், இந்தியாவில் ஏற்படும் மாற்றத்தில் ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், அந்த மாற்றத்தில் பங்கு கொள்ளவும் வேண்டும்.

தற்சார்பு இந்தியா என்பது உலகத்திடம் இருந்து தன்னை தனிமைப்படுத்திக்கொண்டு காத்துக்கொள்ளும் இந்தியா அல்ல. உலகத்துக்காக, உலகத்துடன் இணைந்து இந்தியாவில் அதிகமாக தயாரிப்பது என்பதே தற்சார்பு இந்தியாவின் அர்த்தம்.

இந்தியா ஈர்த்துள்ள அந்நிய நேரடி முதலீடுகளின் அளவு வளர்ச்சியடைந்துள்ளது இந்தியாவின் வெற்றி குறியீடுகளில் ஒன்றாகும்.

கடந்த ஆண்டு உலகிலேயே மிக அதிகமாக 86 பில்லியன் டாலர்கள் (சுமார் ரூ.7 லட்சம் கோடி) அந்நிய நேரடி முதலீட்டை இந்தியா ஈர்த்தது என்றார் அவர்.

# மணிப்பூர் கலவரம்: 3 நபர் ஆணையம் விசாரிக்க மத்திய அரசு உத்தரவு

**புது தில்லி, ஜூன் 4:** மணிப்பூரில் 80-க்கும் மேற்பட்ட மக்களின் உயிரிழப்புக்கு காரணமான கலவரம் தொடர்பாக விசாரணை நடத்த குவாஹாட்டி உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி அஜய் லம்பா தலைமையில் 3 நபர் ஆணையத்தை அமைத்து மத்திய உள்துறை அமைச்சகம் ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டது.

மணிப்பூரில் பெரும்பான்மையாக உள்ள 'மைதேயி' சமூகத்தினர், தங்களுக்கு பழங்குடியின அந்தஸ்து வழங்க கோரி வருகின்றனர். இதற்கு 'நாகா' மற்றும் 'குகி' சமூகத்தினர் அடங்கிய சிறுபான்மை பழங்குடியின சமூகத்தினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அந்த மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் மைதேயி மற்றும் பழங்குடிகளுக்கு இடையே கடந்த மே 3-ஆம் தேதி ஏற்பட்ட மோதலில் 80-க்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர். அங்கு மீண்டும் இயல்பு நிலை திரும்ப ராணுவம் மற்றும் துணை ராணுவப் படை வீரர்கள் பேர் குவிக்கப்பட்டனர்.

கள நிலவரங்களைக் கண்காணித்து, சட்டம்-ஒழுங்கு நிலையைக் கட்டுக்குள் கொண்டு வர அந்த மாநிலத்துக்கு உள் துறை அமைச்சர் அமித் ஷா கடந்த 29-ஆம் தேதி 4 நாள் பயணம் மேற்கொண்டார்.

இந்நிலையில், மணிப்பூர் கலவரம் தொடர்பாக விசாரித்து மத்திய அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க 3 நபர் ஆணையத்தை அமைத்து உள்துறை அமைச்சகம் ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'மணிப்பூர் மாநிலத்தில் கடந்த மாதம் 3-ஆம் தேதி முதல் பல்வேறு சமூக மக்களைக் குறி வைத்து நடந்து வரும் தொடர் கலவரத்துக்கான காரணம் மற்றும் அதன் பரவல் குறித்து விசாரிக்க குவாஹாட்டி உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி அஜய் லம்பா தலைமையில் 3 நபர்கள் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. ஆணையத்தில் ஓய்வுப் பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ஹிமான்சு சேகர், ஓய்வுப் பெற்ற ஐபிஎஸ் அதிகாரி அலோகா பிரபாகர் ஆகியோர் ஆணையத்தில் இடம்பெறுகின்றனர்.

விசாரணையின்போது கலவரத்துக்கு வழிவகுத்த நிகழ்வுகளின் பின்னணி, வன்முறைச் சம்பவங்களால் ஏற்பட்ட பாதிப்புகளின் உண்மை நிலவரம், கலவரத்தைக் கட்டுப்படுத்த நிர்வாகம் சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதில் நிலவிய குறைபாடுகள் உள்ளிட்டவை குறித்து ஆராயப்படும்.

### தேசிய நெடுஞ்சாலையில் தடைகளை அகற்ற அமித் ஷா வேண்டுகோள்

மணிப்பூரின் இம்பால்– நாகாலாந்தின் திமாப்பூர் இடையிலான தேசிய நெடுஞ்சாலை எண் 2–யில் போக்குவரத்தை மறிக்கும் வகையில் தடைகளை உருவாக்கி மக்கள் போராடி வருகின்றனர். இதனால், உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை நாகாலாந்துக்கு கொண்டு செல்வதில் கடும் சிரமம் நிலவுகிறது.

இது குறித்து அமைச்சர் அமித் ஷா வெளியிட்ட ட்விட்டர் பதிவில், 'இம்பால்–திமாபூர் இடையிலான தேசிய நெடுஞ்சாலையில் உள்ள தடைகளை மக்கள் நீக்க வேண்டும். இதனால் உணவு, மருந்துகள், பெட்ரோல், டீசல் மற்றும் பிற தேவையான அத்தியாவசிய பொருள்கள் நாகாலாந்து மக்களை சென்றடையும். மணிப்பூர் மக்களுக்கு எனது மனப்பூர்வமான வேண்டுகோள் இது.

மக்களிடையே பேச்சுவார்த்தையை நடத்தி தீர்வைக் கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளூர் நிர்வாகத்தினரிடமும் நான் கேட்டுக்கொள்கிறேன்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

கலவரம் தொடர்பாக தனிநபர்கள் அல்லது அமைப்புகள் அளித்த புகார்கள் மற்றும் குற்றச்சாட்டுகளையும் இந்த ஆணையம் கண்காணித்து தீர்வு காணும். கலவரம் தொடர்பாக விரிவான அறிக்கையை விசாரணைத் தொடங்கப்பட்ட 6 மாதத்துக்குள் மத்திய அரசுக்கு ஆணையம் சமர்ப்பிக்க வேண்டும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY

# 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்: முதல்வர் நாளை திறந்து வைக்கிறார்

**சென்னை, ஜூன் 4:** தமிழகம் முழுவதும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை (ஜூன் 6) திறந்து வைக்கவுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை, தியாகராயர் நகர் விஜயராகவா சாலையில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார். மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழுமத் திட்ட இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷ், ஆயிரம் விளக்கு தொகுதி எம்எல்ஏ எழிலன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

அப்போது, அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் புதிதாக அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் கடந்த ஆண்டு அறிவித்தார். அதன்படி, அந்த மையங்கள் தேசிய நகர்ப்புற சுகாதாரக் குழுமம் மூலம் கட்டப்பட்டு செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளன.

முதல்கட்டமாக மாநகராட்சி பகுதிகளான சென்னையில் 140 மையங்களும், கோவையில் 50, மதுரையில் 46, திருச்சியில் 25, சேலத்தில் 25, திருப்பூரில் 25 மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இதைத் தவிர நகராட்சி பகுதிகளில் 189 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் கட்டப்பட்டுள்ளன. அவ்வாறு கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை பொது மக்களின் பயன்பாட்டுக்காக வரும் செவ்வாய்க்கிழமை (ஜூன் 6) முதல்வர் திறந்து வைக்கவுள்ளார்.

தியாகராயர் நகர் விஜயராகவா சாலையில் அமைக்கப்பட்டுள்ள நலவாழ்வு மையத்தை நேரடியாகவும், மற்ற மையங்களை காணொலி முறையிலும் அவர் திறந்து வைக்கவிருக்கிறார்.

ஒவ்வொருநகர்ப்புறநலவாழ்வு மையத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர் மற்றும் ஒரு துணை பணியாளர் மாவட்ட சுகாதார சங்கங்கள் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர். நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் செயல்படும்.

இந்த மையங்களில் அத்தியாவசிய மருத்துவ சேவைகள், பரிசோதனைகள் அளிக்கப்படும். நோயாளிகள் மருத்துவர்களை காணொலி மூலம் தொடர்பு கொண்டும் சிகிச்சை பெறலாம். இ-சஞ்சீவினி இணையதளம் மூலமாக மருத்துவர் காணொலியில் நோயாளிகளின் உயர் சிகிச்சைக்காக மற்றொரு முதுநிலை மருத்துவரின் ஆலோசனையைப் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது என்றார் அவர்.

# துப்பாக்கி சுடுதல்: இந்தியாவுக்கு 2-ஆவது தங்கம்

சுல், ஜூன் 4: ஜெர்மனியில் நடைபெறும் ஐஎஸ்எஸ்எஃப் ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் 10 மீட்டர் ஏர் ரைஃபிள் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவுக்கு ஞாயிற்றுக்கிழமை தங்கப் பதக்கம் கிடைத்தது.



அந்தப் பிரிவின் இறுதிச்சுற்றில், இந்தியாவின் கௌதமி பனோத்/அபினவ் ஷா இணை 17-7 என்ற புள்ளிகள் கணக்கில், பிரான்ஸின் ஜோடியை வீழ்த்தி முதலிடம் பிடித்தனர். இதே பிரிவில் பங்கேற்றிருந்த இந்தியாவின் ஸ்வாதி சௌதரி/சலீம், தகுதிச்சுற்றில் 624.3 புள்ளிகளுடன் 7-ஆம் இடம் பிடித்து அத்துடனேயே வெளியேறினர்.

அதேபோல், 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் சைன்யம்/அபினவ் சௌதரி இணை 12 - 16 என்ற புள்ளிகள் கணக்கில் தென் கொரியாவின் ஜூரி கிம்/சாங்கின் கிம் கூட்டணியிடம் வெற்றியை இழந்து வெள்ளி பெற்றனர். வெண்கலப் பதக்கச் சுற்றில் இந்தியாவின் சுருச்சி இந்தர் சிங்/ஷா"பம் பிஸ்லா இணை 16-14 என்ற புள்ளிகளில் வென்றது.

ஆடவர் ஸ்கீட் பிரிவில் இந்தியர்கள் இறுதிச்சுற்றுக்கு முன்னேறவில்லை. ரிது ராஜ் பந்தேலா 19-ஆம் இடமும், அபய் சிங் ஷெகான் 21-ஆவது இடமும், முனெக் பதுலா 26-ஆவது இடமும், மகளிர் பிரிவில் ராய்ஸா தில்லன் 11-ஆவது இடமும், முஃபாதலால் தீசாவாலா 14-ஆவது இடமும், சஞ்ஜனா சூத் 16-ஆவது இடமும் பிடித்து ஏமாற்றமளித்தனர்.

ஏற்கெனவே, மகளிர் தனிநபர் பிஸ்டல் பிரிவில் சைன்யம் வென்றிருந்த தங்கத்துடன் சேர்த்து, இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 2 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம் என 4-ஆக உள்ளது.

# பிரதமரின் 'லைஃப்' முன்முயற்சி போட்டி: சென்னை, கோவை மாணவர்கள் வெற்றி

நமது சிறப்பு நிருபர்

**புதுதில்லி, ஜூன் 4:** பிரதமர் மோடியின் பருவநிலை மாற்றத்துக்கான 'லைஃப்' முன்முயற்சியை வலியுறுத்தி நாடு முழுவதும் நடைபெற்ற பல்வேறு வகையான போட்டிகளில் வெற்றி பெற்ற சென்னை, கோவை கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கு மத்திய சுற்றுச் சூழல், வனம், பருவநிலை மாற்ற துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் ஞாயிற்றுக்கிழமை விருதுகளை அளித்தார்.

சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு இந்த விருது வழங்கும் நிகழ்ச்சி தில்லியில் நடைபெற்றது. நான்கு விதமான போட்டிகள் நடைபெற்றன. முதலில் தெற்கு, கிழக்கு, மேற்கு, வடக்கு, வடகிழக்கு என 5 வட்டாரங்கள் அளவிலான பள்ளிகள், கல்லூரிகள், இளைஞர்கள் மத்தியில் போட்டிகள் நடைபெற்றன.



வீட்டு பயன்பாட்டு பேட்டரிகள் மறு சுழற்சி முறைக்கான தேசிய அளவிலான முதல் விருது பெற்ற சென்னை ராமாபுரம் எஸ்.ஆர்.எம். ஈஸ்வரி பொறியியல் கல்லூரி மற்றும் ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி மாணவர்கள்.

இந்த வட்டாரங்களில் நடைபெற்ற இறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கிடையே தேசிய அளவிலான போட்டி இறுதியாக தில்லியில் நடைபெற்றது. இதில் தமிழகத்தைச் சேர்ந்த சென்னை, கோவை கல்லூரி, பள்ளி மாணவர்கள் வெற்றி பெற்றனர். இவர்களுக்கு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அமைச்சர் பூபேந்தர் யாதவ் விருதுகளை அளித்தார்.

வீடுகளில் சாதாரணமாக உபயோகிக்கும் பேட்டரிகள் மறுசுழற்சி முறைக்கு செல்லாமல் குப்பைகளில் சேர்ந்து அதில் உள்ள ரசாயனங்கள் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிப்பதைத் தடுக்கும் முறையை சென்னை ராமாபுரம் எஸ்.ஆர்.எம். ஈஸ்வரி பொறியியல் கல்லூரி மாணவர் முத்து கணேஷ், சென்னை ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி மாணவி கீர்த்தனா, மாணவர் ஹயக்ரீவன் போன்றோர் கூட்டாக உருவாக்கினர். இவர்கள் மூவரும் கூட்டாக தேசிய அளவில் முதல் பரிசை வென்றனர்.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது குறித்த இளைஞர் மாநாட்டில் பேசிய கோவை ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவியான நந்தனா பத்மராஜுக்கு 'யூத் ஐகான்' விருது கிடைத்தது.

தெருக்கூத்து நாடகப் போட்டியில் கோவையைச் சேர்ந்த கிக்கானி வித்யா மந்திர் பள்ளி மாணவர்கள் நடித்த 'புவியின் குரல்' நாடகத்துக்கு தேசிய அளவிலான முதல் பரிசு கிடைத்தது. இதில் இந்தப் பள்ளியைச் சேர்ந்த ஒன்பது மாணவர்கள் பங்கேற்றனர்.

தமிழகத்தை சேர்ந்த இந்த மூன்று விதமான விருதாளர்களுக்கும் தலா ரூ. 50,000 ரொக்கப் பரிசையும், சான்றிதழையும் மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் வழங்கினார்.

EVA STALIN IAS

EVA STALIN IAS ACADEMY